## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் - 2017

---

இலங்கை சீமெந்து கூட்டுதாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 29(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகார சட்டத்தின் 13 (7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று 2018 ஜுலை 17 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 திரட்டிய நிதிக் கூற்றுக்கள்

கூட்டுத்தபனத்தினால் 1981 ஆம் ஆண்டின் போது லங்கா சீமெந்து கம்பனியின் ரூபா 10 இற்கான பங்குகள் 108,361,891 இற்கான ரூபா 1,083,618,910 தொகை முதலீடு செய்திருந்ததுடன், இந்தப் பங்குகளின் தற்போதைய சந்தை பெறுமதி ரூபா 617,662,779 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் நிருவகிக்கும் கம்பனி வ / ப லங்கா சீமெந்து கம்பனியின் பங்குகளின் உரிமையில் 62.45 சவீதம் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக திரட்டிய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1964 ஏப்ரல் 17 ஆம் திகதி 14012 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் காங்கேசன்துறையில் அமைந்துள்ள சீமெந்து தொழிற்சாலை மற்றும் காணி என்பன கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியாக உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்களின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) புத்தளம் மாவட்டத்தில் பாலாவியில் அமைந்துள்ள அட்டவில்லு எனப்படும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 221 ஏக்கர் காணியில் இருந்து 69 ஏக்கர்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 5352 ஏக்கர்களான அருவக்காலு சுண்ணாம்பு கல்படிவு 50 வருட காலத்திற்காக ஹொல்ஸியம் லங்கா கம்பனி (தற்போது சியேம் சிட்டி கம்பனி) க்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டளவிலும் கூட்டுத்தாபனத்தின் பிரதான வருமானமாக இந்த சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களுக்கு பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2013 ஆண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 255,967 இற்கான பொருளாதார சேவைக் கட்டண வரித் தொகை மற்றும் 2016 ஆண்டில் குறைபாடுகளுடன் கணிக்கப்பட்டிருந்தமையினால் மிகையாக செலுத்தியிருந்த ரூபா 129,211 இற்கான பொருளாதார சேவைக் கட்டணக் கொடுப்பனவு, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிக்காமல் பேரேட்டுக் கணக்குகளின் மூலம் ஒன்றிற்கு ஒன்று சமப்படுத்தியிரு ந்தமையால் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டண வரிக் கணக்கின் மீதி ரூபா 129,211 இனால் குறைவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(உ) கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் 1990 கணக்கு ஆண்டு தொடர்பாக வழங்கப்பட்ட ரூபா 335,249 தொகை கணக்காய்வுக் கட்டணத்தை செலுத்த வேண்டிய செலவு ஒன்றாக கணக்கீடு செய்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கான கணக்காய்வு கட்டண ஒதுக்கம் 2015 ஆண்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கூட்டுத் தொகை ரூபா 571,875 தொகை குறைவாக ஒதுக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை

| கணக்கு விடயம் | சமர்பிக்கப்படாத சான்று |
|---|---|
| (அ) 2008 ஆண்டின் போது 8600 மெற்றிக் தொன்கள் சீமெந்து இறக்குமதி செய்தல் | மொத்த சீமெந்து இறக்குமதி தொடர்பான கொடுப்பனவு உறுதிச் சான்று, முறைப் பிரகாரம் பேணப்பட்ட கோவைகள் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள். |
| (ஆ) கணிணிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் 32 பண்டங்கள் குறைவாகக் காணப்பட்டன. அவற்றின் கிரயம் பறுமதி |

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு கூட்டுத் தொகை ரூபா 74,469,339 தொகையான வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதியில் 1 வருடங்கள் முதல் 3 வருடங்களுக்கு இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 11,510,027 தொகையும் 03 வருடங்களை விட மிகையான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 58,179,621 தொகையும் காணப்பட்டதுடன் இந்த நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு கூட்டுத் தொகை ரூபா 42,317,003 தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் 1 வருடம் முதல் 3 வருடங்களுக்கு இடைப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,851,642 தொகையும் 3 வருடங்களை விட மிகையான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,896,742 தொகையும் காணப்பட்டதுடன் இந்த நிலுவை கடன் மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 12,854,883 தொகையான முன்னைய ஆண்டுகளுக்கான பெறுமதி கூட்டிய வரியினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தியிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் ம்ற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| **சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டம் | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 8,410,618 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரித் தொகையினை இவ்வறிக்கை திகதி வரை அனுப்பியிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 751 | பிரமாணத்தின் பிரகாரம் பொருட் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| (இ) 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01 / 2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | |
| (i) பிரிவு 5 (1)(அ) | குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொழில் முயற்சியிலுள்ள சக்திகளை மற்றும் பலவீனங்களை மதிப்பீடு ஆளாக்கி திட்டங்களை நாளது வரை ஆக்கப்பட வேண்டுமெனினும், நிறைவேற்றிக் கொள்ள முடியாத குறிக்கோள்கள் மற்றும் செயற்படுத்த முடியாதிருந்த குறிக்கோள்கள் தொடர்பாக முறையான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கூட்டுத்தாபனத்தின் திட்டங்களை நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 5(1)(ஈ) | அவ்வக் காலத்தில் நெருங்க வேண்டிய இலக்குகளை நிறுவுதலும் அவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் பொறுப்புகளின் செயற்பாட்டு மட்டம் வரை பகிரப்பட வேண்டுமெனினும், வருடாந்தம் நெருங்க வேண்டிய இலக்குகள் மற்றும் அக் குறிக்கோள்களுக்கான பொறுப்புக்களை பகிர்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br><br>பிரிவு 9.4 | மீளாய்வாண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் இன்றி இரண்டு ஊழியர்கள் 2017 ஆகஸ்ட் 01 திகதி முதல் சீமெந்து கம்பனிக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03⁄2015 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கை | முற்பணங்களை தீர்த்தல் வழங்கப்பட்டிருந்த நிதியாண்டு திசெம்பர் 31 திகதி விடக் கூடுதலாக தாமதிக்க கூடாது எனினும், 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை 13 சந்தர்பங்களில் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 240,946 இற்கான முற்பணங்களை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறும் தீர்த்தல் நடைபெற்றிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 15,298,106 இற்கான மிகையொன்றாகக் காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் போது ரூபா 31,700,843 இற்கான மிகையொன்று காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 16,402,737 இற்கான குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான விற்பனவுகள் ரூபா 48,489,811 இனால், அதாவது 76 சதவீதத்தினால் குறைந்திருத்தல் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 34,986,914 இனால் அதாவது 38 சதவீதத்தினால் குறைந்திருத்தல் மேற்கூறியவாறு தேறிய வருமானம் குறைவதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது பற்றாக்குறை ஒன்று காணப்பட்ட போதிலும் மீண்டும் 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வருடாந்தம் மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசுக்குச் செலுத்திய வரிகள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 338,370,664 இற்கான சூனியப் பெறுமதியாகக் காணப்பட்ட கூட்டுதாபனத்தின் பங்களிப்பு 2014 ஆண்டு முதல் நேர் பெறுமதி ஒன்றாக மாறிய போதிலும், வருடாந்தம் குறைவடைந்து மீளாய்வாண்டு அளவில் ரூபா 37,026,792 இற்கான நேர் பெறுமதியை கொண்டிருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 14 திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரிவு 02 மற்றும் பிரிவு 5 (2) இன் பிரகாரம் செயல்நடவடிக்கை திட்டத்தில் அடங்க வேண்டிய மனிதவள அபிவிருத்தி திட்டம், உள்ளகக் கணக்காய்வுத் திட்டம், கடனைத் திருப்பிச் செலுத்தும் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1 இன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் காட்டப்படுள்ள இலக்குகள் யதார்த்மானதாகவும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டுமெனினும், தன்னிச்சையான ஓய்வூதிய நட்டஈட்டு திட்டமொன்றினை செயற்படுத்தி ஊழியர்களை அகற்றிய நிறுவனமொன்றிற்கு செயல் முறையில் நிறைவேற்ற முடியாத குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் கூட்டுத்தாபனத்தின் திட்டத்தில் காட்டபட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(இ) மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரிவு 5.1.2 இன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் அடங்க வேண்டியிருந்த நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, மனித வளங்கள் , முகாமைத்துவ திறமைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவு, நிறுவனத்தில் தற்போது காணப்படும் வளங்கள் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு ஆகிய முக்கிய விடயங்களை கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீமெந்து உற்பத்தி செய்து விற்பனை செய்தல் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தின் முக்கிய குறிக்கோள்களாக இருந்த போதிலும் கடந்த யுத்த சூழ்நிலையின் பின்னர் காங்கேசன்துறையில் சீமெந்து உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதி அளவில் சீமெந்தி பைகள் இறக்குமதி செய்து விற்பனை செய்தல் மற்றும் கொங்கிரிட் உற்பத்தி செய்தலும் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அரசு முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் 2016 அக்தோபர் 20 திகதி பீஈ/ஆர்ஈஎஸ்/வீஆர்எஸ் இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் தன்னிச்சையான ஒய்வூதிய நட்டஈடு வழங்கிய பின்னர் கூட்டுத்தாபனத்தினால் மீதியான ஊழியர்களைப் பயன்படுத்தி வாடகை தீர்மானித்தல் , காங்கேசன்துறை உற்பட மீதியாகவுள்ள காணிகளுக்காக வாடகையாளர்கள் கண்டுபிடித்தல், வாடகை உடன்படிக்கைகளை நாளது வரை ஆக்கல் ஆகிய அலுவல்கள் மேற்கொண்டு அந்த வருமானத்தின் மூலம் ஊழியர்களின் கொடுப்பனவுகளை மேற்கொண்டு மீதியாக உள்ள தொகையை அரசிற்கு அனுப்பபட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் விற்பனைக்காக சீமெந்து கொள்வனவு 91 சதவீதத்தினால் குறைந்திருந்ததுடன், அந்த குறைவடைதல் 2014 ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆண்டின் போது 90 சதவீதமாக காணப்பட்டது. 2016 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது விற்பனை 77 சதவீதத்தினால் அதாவது, ரூபா 46,146,262 இனால் குறைந்திருந்தது. 2017 ஆரம்ப அரை ஆண்டின் பின்னர் சீமெந்து இறக்குமதி செய்து விற்பனவு செய்தலை நிறுத்தப்பட்டமை இதற்கு காரணமாக இருந்தது.

(ஈ) காங்கேசன்துறை கொங்கிரீட் உற்பத்திகள் மற்றும் விற்பனை பிரிவின் மொத்த விற்பனை வருமானத்தை விட கூடுதலான செலவுகள் மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தமையால் தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், கடந்த ஐந்து ஆண்டுகளின் போது கொங்கிரீட் உற்பத்தி பொருட்களின் விற்பனை 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டிற்கு இடையே ரூபா 25,620,000 முதல் ரூபா 1,128,281 தொகை இடையே வீச்சில் தளம்பலுடன் காணப்பட்டது. 2016 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது கொங்கிரீட் தூண்களின் விற்பனை 72 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது சீமெந்து

சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டிருந்ததால் அதற்கான காரணமாகக் இருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் வங்கி நடைமுறை கணக்கு ஒன்றில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 608,359 தொகையாக காணப்பட்ட போதிலும், பரீட்சை மீதிகள் மற்றும் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் அந்த வங்கி நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 2,156,449 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,548,090 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது 2008 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் இந்த வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அரச வங்கிகளில் இருந்து பெற்றிருந்த செலுத்த வேண்டிய மொத்த வங்கிக் கடன்களின் பெறுமதி ரூபா 97,793,352 தொகையாக இருந்தது. அந்த வங்கி கடன்களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட மொத்த வங்கிக் கடன் வட்டி ரூபா 19,880,338 தொகையாக காணப்பட்டதுடன், கூட்டுத்தாபனத்தின் வினைத்திறனற்ற நிதி முகாமைத்துவத்தின் காரணமாக பாரிய நிதி கிரயம் ஒன்று வருடாந்த அரச வங்கிகளுக்கு செலுத்த நேரிட்டிருந்தது.

(இ) தன்னிச்சையான ஓய்வூதிய நட்டஈட்டு திட்டத்தினை செயற்படுத்திய பின்னர் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக லங்கா சீமெந்து கம்பனியின் 62.45 சதவீத பங்குகளை, பங்குச் சந்தையில் விற்பனை செய்து வருமானம் ஒன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அரச முயற்சி திணைக்களத்திற்கு மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் 2016 அக்தோபர் 20 திகதிய பீஈ/ஆர்ஈஎஸ்/வீஆர்எஸ் இலக்கங் கொண்ட கடிதத்தின் பிரகாரம் அறிவுறை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஜுலை வரையும் முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன

(அ) காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மற்றும் கட்டிடத் தொகுதி அமைந்துள்ள 741 ஏக்கர் காணியில் 297 ஏக்கர் காணி வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு சாடப்பட்டிருந்த போதிலும் மீதியான 444 ஏக்கர் காணியின் உரிமை தொடர்பாக எழுத்து மூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காணி, தொழிற்சாலை மற்றும் கட்டிடங்கள் என்பன உயர் பாதுகாப்பு வலையத்தில் இராணுவத்தின் பொறுப்பில் விளைவற்ற சொத்துக்களாக காணப்பட்டன.

(ஆ) 1967 ஜுலை 12 ஆம் திகதி 14756/7 ஆம் இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 288 ஆம் இலக்க காணி உறுதியின் மூலம் கொள்ளுபிடியில் அமைந்து 89.9 பர்சஸ் காணி கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகியிருந்தது. மீளாய்வாண்டு அளவில் பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 735,000,000 தொகையான இந்தக் காணி, 2008 ஆண்டு முதல் அரச வங்கி ஒன்றிற்கு அடகு வைக்கப்பட்டு கடன் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடன் மீதி ரூபா 97,793,352 தொகை ஆக

இருந்தது. காலி வீதியில் அண்மையிலுள்ள இந்த காணி, 50 வருட காலப்பகுதயில் ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்ற சொத்து ஒன்றாக காணப்பட்டது.

(இ) புத்தளம் மாவட்டத்தில் பாலாவியில் அமைந்துள்ள அட்டவில்லு எனப்படும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 221 ஏக்கர் காணியில் 159 ஏக்கர் 40 வருடங்கள் முதல் ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1981 ஆம் ஆண்டின் ஆரம்பிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து கம்பனியின் பங்குகளின் 62.45 சதவீதப் பங்குகளின் உரிமை கூட்டுத்தாபனத்திற்கு இருந்து போதிலும், அந்த முதலீடுகளின் மூலம் கடந்த 26 வருட காலப்பகுதியில் நலன்கள் ஏதும் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருக்கவில்லை.

(ஆ) விற்பனை செய்வதற்காக இறக்குமதி செய்யப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 798,917 தொகையாக 50 கிலோ கிராம் எடை 1128 சீமெந்து பைகள் காலவதியாகியிருந்த காரணத்தினால் ரூபா 350,000 தொகைக்கு விற்பனவு செய்யப்பட்டமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 448,937 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது

## 4.5 பதவியணி நிருவாகம்

கூட்டுத்தாபனத்தின் பதவியணியினர் 2016 ஜுலை 31 திகதி முதல் தன்னிச்சையை ஓய்வு நட்டஈடு திட்டமொன்றின் மூலம் ஓய்வு பெற்றிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளவாறான பதவியணி 14 பேருக்கு வரையறுக்கப்பட்டிருந்தது தன்னிச்சையான ஓய்வு பெறல் நட்டஈட்டு முறையை செயற்படத்திய பின்னர் கூட்டுத்தாபனத்தின் பதவியணிக்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

## 5 நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக சீமெந்து கூட்டுத்தாபனத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

(அ) மேற்கூறியவாரு 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சீமெந்து கூட்டுதாபனத்தினால் உரிய முறையில் அறிந்திருக்காமையினால் அந்த கருமங்களுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நெருங்க வேண்டிய திருப்பு முனைகளை இலக்குகள் மீது நெருங்குவது தொடர்பாக அளவீடு செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான இலக்குகளை நெருங்குவதற்கான நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட கருமங்கள் வருடாந்த திட்டத்தில் உட்படுத்தியிருக்காததுடன் அக்கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உட்படுத்தி இருக்கவில்லை.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக் கூற்றுக்கள் சமர்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 இன் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டுமெனினும், சீமெந்து கூட்டுத்தாபனத்தின் 2017 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

2016 ஜுலை மாதத்தில் தன்னிச்சையாக ஓய்வு பெறும் நட்டஈடு திட்டத்தை செயற்படுத்தி கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களை ஓய்வு பெறச்செய்த பின்னர் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தில் உள்ளக கணக்காய்விற்காக உத்தியோகத்தர் எவரும் ஈடுபடுத்தியிருக்காததுடன், ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக கருமங்கள் ஏதும் நிறைவேற்றியிருக்கவில்லை.

### 6.3 பெறுகைமற்றும் ஒப்பந்தவேலை செயற்பாடுகள்

#### 6.3.1 பெறுகைகள்

2006 ஜனவரி 25 திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகை செயற்பாடு கடைபிடிக்கப்படாமல், தொழில்நுட்ப ஆய்வு ஒன்று மேற்கொள்வதற்காக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அருவக்காலு காணி, தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது இந்த தொழில்நுட்ப ஆய்வு தொடர்பாக கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் கம்பனி இடையே, எழுத்துமூல உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

### 6.4 பாதீட்டு கட்டுபாடு

மீளாய்வாண்டின் போது 09 செலவு விடயங்களின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகளில் 23 சதவீதம் முதல் 229 சதவீதம் வரை முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 6.5 தீர்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் அடிப்படையில் சீமெந்து விற்பனவு செய்வதற்காக விற்பனை முகவர் பதவி வழங்கப்படும் போது கடன் அடிப்படையில் வழங்கப்படும் பெறுமதிக்கு ஏற்ப பிணைமுறி ஒன்று பெற்றுக் கொள்ளாமை, கடன் வழங்கும் போது மற்றும் கடன் சேகரிக்கும் போது முகாமைத்துவத்தினால் முறையான மற்றும் வினைத்திறனுள்ள நடைமுறையொன்றினை கடைபிடிக்காமையால் மீளாய்வாண்டு இறுதிவரை கூட்டுத்தொகை ரூபா 52,506,824 தொகைக்கான கடன் மீதியினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,200,000 தொகை கொள்வனவு செய்திருந்த காலி, உனவடுன, கஸ்பான இல் அமைந்து 06 ஏக்கர் காணி முகாமைத்துவத்தினால் ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கு பயன்படுத்தாமையால் காலி பிரதேச செயலாளரினால் சுனாமியால் பாதிக்கப்பட்டோர்களை மீள்குடியேற்றப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தினால் அந்த காணிக்காக நட்டஈடு பெற்றுக் கொல்வதற்காக காலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான புத்தளத்தில் அமைந்துள்ள 5352 ஏக்கர் அருவக்காலு சுண்ணாம்பு படிவு 50 வருட காலப் பகுதிக்காக ஹொல்ஸிம் லங்கா கம்பனிக்கு குத்தகை தொகை மாற்றமின்றிய குத்தகை உடன்படிக்கை ஒன்றின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. 2011 ஆகஸ்ட் 16 திகதி நடைபெற்று பாராளுமன்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் இந்த குத்தகை உடன்படிக்கையை திருத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டு 06 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அந்த குத்தகை உடன்படிக்கையைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள எண்ணை தாங்கி தொகுதி எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளாமல் 2010 ஆண்டு முதல் பெற்றோலிய மொத்த கலஞ்சிய முடிவிடக் கம்பனியினால் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகள் மட்டும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது பின்வரும் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்பு | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுபாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை மற்றும் கணிப்பீட்டு சபை நியமனம் செய்து சொத்துக்கள் கணிப்பீடு செய்தலை தாமதம் செய்தல். |
| (ஆ) | களஞ்சிய கட்டுபாடு | சீமெந்து இருப்பு பேணல் கலஞ்சியப்படுத்தல் மற்றும் இருப்பு பதிவுகள் பேணல் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தாமை. |
| (இ) | உள்ளகக் கட்டுபாடு | உள்ளக கட்டுபாட்டு முறையினை அறிமுகப்படுத்தி அவற்றை உரியமுறையில் செயற்படுத்தி கட்டுபாட்டு ஒன்றினை பேணப்படாமை, உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவப்பட்டு பேணப்படாமை. |
| (ஈ) | கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுபாடு | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்யாமை, கடன் விற்பனவு தொடர்பான அறிக்கை உரிய முறையில் பேணப்படாமை மற்றும் கடன் கொடுத்தோருக்கு செலுத்தி தீர்த்திருக்காமை. |
| (உ) | உள்ளக கணக்காய்வு | உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஒன்றின் மூலம் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |